


# ஊழியர் உலகம்

Volume: 17 | Issue: 05 | July 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

உண்மையாக மனம் திரும்பும் போது கிடைப்பது

# தயை

# உள்ளே!



4



10



24



28

## வாலிபர் உலகம்

**வாலிபர்களே!**
**உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள்.**




₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

இப்பத்திரிக்கையை குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்குப் பிரயோஜனமான கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

Scan ME

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547 | E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்




*எனக்கு அன்பான வாலிபர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!*

வாலிபர்களாகிய நீங்கள், தேவனுக்காக வல்லமையான காரியங்களைச் செய்வதற்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட கடைசிக் கால எழுப்புதல் வீரர்கள். தேவன் பயன்படுத்திய மகத்தான பாத்திரங்கள் அனைவரும் தங்கள் விசுவாசப் பயணத்தில் இயேசுவின்மேல் தங்களுடைய கண்களைப் பதித்திருந்ததினால், வெற்றியோடு ஓடி முடிக்க முடிந்தது.

இன்றும் அநேகர், கொஞ்சம் பெலன் இருந்தபோதிலும் சோர்ந்துபோகாமல், தடுமாறினாலும் தேவனுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அது தேவன் அவர்கள்மேல் பாராட்டிய தயவினாலே. ஆனால் சிலர் தங்கள் ஓட்டத்தில் பின்தங்கிவிட்டார்கள்; இன்னும் சிலர் ஓட்டத்தையே நிறுத்திவிட்டார்கள். அதற்குக் காரணம் உலகத்தின் ஈர்ப்பும் கவர்ச்சியுமே.

விழுந்துபோனவர்களிடத்தில் தேவன் கண்டிப்பையும், உன்னிடத்தில் தயவையும் காண்பித்திருக்கிறார். ஆகையால், அந்தத் தயவில் நிலைத்திருப்பாயானால், தேவனுடைய கிருபை உன்மேல் தொடர்ந்து நிலைத்திருக்கும்.

**சிம்சோன்:**
பலவானாக இருந்தான்; ஆனால் தனது மனதை அடக்கத் தவறியதால், தேவன் கொடுத்த தரிசனத்தை மறந்து, அபிஷேகத்தை இழந்து, பிறருக்குக் காட்சிப்பொருளாக மாறினான்.



**சாலமோன்:**
ஞானத்தில் சிறந்தவனாய் விளங்கினான்; ஆனால் தேவனை மறந்து, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றி, கர்த்தரை விட்டு தனது இருதயத்தைத் திருப்பினான்.



**தாவீது:**
"ஏத்தியனாகிய உரியாவின் விஷயத்தில் நடந்ததைத் தவிர, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றிலும் தன் வாழ்நாளெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, ஒன்றையும் விட்டு விலகாதிருந்தான்" (1 இராஜாக்கள் 15:5).



தாவீதின்மேல் தேவன் காண்பித்த தயவை, அவன் கடைசிவரை காத்துக்கொண்டான். அதற்கான முக்கியக் காரணம் அவனுடைய உண்மையான மனந்திரும்புதலே. தாவீது ஒருமுறை சறுக்கியிருந்தாலும், மனந்திரும்பி மீண்டும் எழுந்து, தேவனுடைய தயவில் நிலைத்திருந்தான்.

**பாவத்திற்கு மரித்து, நீதிக்காக உயிரோடு வாழ அழைக்கப்பட்ட நீயும் இனி பின்திரும்பாமல் இயேசுவை நோக்கி ஓடு!**
**தாவீதைப் போல நீயும் தேவனுடைய தயவில் நிலைத்திருந்து, உன் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிப்பாயாக!**

*கிறிஸ்துவின் பணியில்*
**மோகன் சி. லாசரஸ்**



# சாதாரண குடும்பம்... அசாதாரண வெற்றி!!!

சாட்சி: தொகுப்பு: வில்லியம்



**ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, ஆண்டவர் கொடுத்த ஞானத்தை சிறுவயதிலிருந்தே கர்த்தருக்கென்று பயன்படுத்தியதன் விளைவாக, இன்று NEET தேர்வு எழுதி மருத்துவம் படிக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் மாணவி எபினேசர் அவர்களைப் பற்றித்தான் நாம் பார்க்கப் போகிறோம்.**

**உங்களது குடும்பம் மற்றும் சிறுபருவம் பற்றிச் சொல்லுங்களேன்?**

நான் தென்காசி மாவட்டத்தில் உள்ள எனது சொந்த ஊரான பாவூர்சத்திரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். திரு. ஆசிர் ஜெயக்குமார், திருமதி ஜான்சி ராணி தம்பதியருக்கு ஒரே மகளாகப் பிறந்தேன். என் பெற்றோர் பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவு இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் என்னைச் சிறுவயதிலிருந்தே கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்த்தார்கள்.

சிறுவயதிலிருந்தே வேதாகம வசனங்களை வாசிப்பது, பாடல்கள் பாடுவது போன்றவற்றில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தேன். ஆலயத்தில் நடைபெற்ற வேதாகமப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களும் சான்றிதழ்களும் பெற்றிருக்கிறேன். படிப்பிலும் எல்லா வகுப்புகளிலும் முதல் நிலை பெற்று வர தேவன் கிருபை செய்து வருகிறார்.

**பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த உங்கள் பெற்றோர் இயேசுவை அறியாமல் இருந்தார்கள் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் பெயர் கிறிஸ்தவர்களாகத்தான் இருந்தீர்களா?**

ஆம். எனது அப்பாவின் வேலை நிமித்தமாக நாங்கள் குடும்பமாக திருப்பூரில் வசித்து வந்தோம். அங்கு ஒரு நல்ல ஆவிக்குரிய சபைக்குத் தொடர்ந்து சென்று வந்தோம். ஆனால் இரட்சிப்பின் அனுபவம் எங்களுக்கில்லை.



அதன்பிறகு முதலில் என் அம்மா இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார்கள். அதன் பின்னர் தினமும் என் தலைமீதும் என் அப்பாவின் தலைமீதும் கைவைத்து ஜெபிப்பார்கள். இப்படித்தான் நாங்கள் படிப்படியாக இயேசு கிறிஸ்துவைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆரம்பித்தோம்.

**சரி... பிறகு இயேசுவை ஏற்றுக்கொண்டீர்களா?**

உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. சில நாட்களுக்குப் பிறகு என் அப்பா வேலை செய்த நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சனையால் அவருடைய வேலை பறிபோனது. இதனால் நாங்கள் மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தோம்.

நல்ல ஆவிக்குரிய சபையையும், நான் படித்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற பள்ளியையும் விட்டு வர வேண்டியிருந்ததால் என் அம்மா மிகவும் வருத்தப்பட்டார்கள். ஆனால் சொந்த ஊருக்கு வந்த பிறகு தேவன் எங்களுக்கு ஒரு நல்ல ஆவிக்குரிய சபையைக் கொடுத்தார்.

நாங்கள் எதிர்பார்த்தபடி எனக்குப் பள்ளி அமையவில்லை. எங்கள் ஊரில் இருந்த ஒரு பள்ளியில் என்னைச் சேர்த்தபோது என் அம்மாவிற்கு வருத்தமாக இருந்தது. ஆனால் தேவன், ''ஒன்றும் இல்லாத இடத்தில் வைத்துத்தான் உன் மகளை உயர்த்துவேன்'' என்று அம்மாவிடம் பேசினார். இது தேவ சித்தம் என்பதை அறிந்து என்னை அந்தப் பள்ளியில் சேர்த்தார்கள்.



இந்தச் சூழ்நிலையில்தான் என் அப்பாவும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். பின்னர் அவர் சொந்த ஊரில் கூலி வேலை செய்து வந்தார்கள்.

**இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு உங்கள் குடும்பச் சூழ்நிலை எப்படி இருந்தது?**

குடும்பத்தில் சமாதானம் இருந்தது. ஆனால் பொருளாதார நெருக்கடி அதிகமாக இருந்தது. பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் என் பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

ஒருமுறை கட்டணம் செலுத்தாததால் பள்ளியில் என்னை மிகவும் கண்டித்தார்கள். அப்போது நான் கண்ணீர் விட்டு அழுது ஜெபித்தேன். தேவன் கட்டணம் செலுத்த வேண்டிய பணத்தேவையைச் சந்தித்தார். அதன்பிறகு தேவன் மீது எனக்கு அதிக நம்பிக்கை வந்தது.

**உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருந்தது?**

Lockdown காலத்தில் ''ஜெபிக்கலாம் வாங்க'' நிகழ்ச்சியின் மூலம் தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். 21 நாட்கள் தானியேல் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு உபவாசத்தோடு ஜெபித்தேன்.

அந்தக் காலத்தில் நானும் என் தோழிகளும் இணைந்து கைப்பிரதி ஊழியமும் செய்து வந்தோம்.




பத்தாம் வகுப்பு ... தேர்வில்
பாவூர்சத்திரம் செயிண்ட் அசிசி மெட்ரிக் பள்ளி சிறப்பிட


பாவூர்சத்திரம் அசிசி பள்ளி முதலிடம்

### உங்கள் படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் சிறுவயதிலிருந்தே நன்றாகப் படிப்பேன். எட்டாம் வகுப்பு படிக்கும் போது கட்டுரைப் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றேன். என் உடலில் இருந்த பலவீனத்தினால் நீண்ட நாட்களாக மருந்துகள் எடுத்துக்கொண்டு வந்தேன். நாலுமாவடியில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் எனக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

பத்தாம் வகுப்பு படித்தபோது, என் உடலில் இரத்தத்தின் அளவு குறைவாக இருந்ததால் படிக்கட்டுகளில் ஏறும்போதும் இறங்கும்போதும் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அடிக்கடி காய்ச்சலும் வந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் 2024-ஆம் ஆண்டு ஜெபமலையில் நடைபெற்ற **Achievers** கூடுகையில் கலந்து கொண்டேன். அப்போது தேவன் என்னோடு பேசினார். என் பயத்தை நீக்கிப் போட்டார்.

''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு'' என்ற வசனத்தை தினமும் சொல்லி ஜெபிப்பேன்.

பத்தாம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலத் தேர்வுகளின் போது காய்ச்சலால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். மாத்திரை எடுத்துக்கொண்டுதான் தேர்வுக்குச் சென்றேன். அந்தச் சூழ்நிலையிலும் தேவன் என்னைப் பெலப்படுத்தி, பத்தாம் வகுப்பில் 496 மதிப்பெண்கள் பெறச் செய்து, மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தை அளித்தார்.

பதினொன்றாம் வகுப்பில் **Maths-Biology Group** தேர்ந்தெடுத்து படிக்க தேவன் கிருபை செய்தார். பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு நாட்களில் இரண்டு மாதங்கள் தொடர்ந்து இருமலால் இரவில் தூங்க முடியாமல் கஷ்டப்பட்டேன். ஆனால் இயேசு அதிலிருந்தும் விடுதலை கொடுத்தார்.

அதன் விளைவாக, 2026-ஆம் ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பில் 564 மதிப்பெண்கள் பெற தேவன் கிருபை செய்தார். தற்போது **NEET** தேர்வுக்காகத் தயாராகி வருகிறேன்.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

தேவ சித்தத்தை அறிந்து அதன்படி வாழும்போது, எல்லா காரியங்களிலும் கர்த்தர் துணை நின்று வெற்றியளிப்பார்.

நாம் பிரச்சினைகளையும் நோய்களையும் கண்டு சோர்ந்து போகாமல் கர்த்தருக்காக வைராக்கியமாக நிற்கும்போது, அவர் நம்முடைய பிரச்சினை நேரங்களில் நமக்காக வைராக்கியமாக நிற்பார்.

தேவனுக்காக வைராக்கியமாக எழும்ப உங்களை ஒப்புக்கொடுங்கள்! இந்தக் கல்வியாண்டில் நீங்களும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் வெற்றி பெற என் வாழ்த்துகள்.



**அன்பான வாலிபர்களே, தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள ஞானத்தை கர்த்தருக்கென்று பயன்படுத்தும்போது, சகோதரி எபினேசரை எல்லாவற்றிலும் உயர்த்தியது போல உங்களையும் உயர்த்துவார்.**

புதிர் : பிரபா


# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்ட வார்த்தைகளின் எதிர்ச்சொற்களை கீழே உள்ள வட்டத்திலிருந்து கண்டறிந்து இருப்பிடத்துடன் எழுதி அனுப்பவும். (எ.கா. புத்தியுள்ள X புத்தியில்லாத)

1. மேன்மை
2. காத்துக்கொள்ளுகிறன்
3. முந்தினோர்
4. ஆசீர்வாதம்
5. மதியீனம்
6. தீமை
7. மெய்
8. அந்தம்
9. சிங்காரம்
10. பிரிவினை




பதில் வந்து சேர வேண்டிய
கடைசி நாள் **15.07.2026**





Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org



# மனந்திரும்பு, கட்டப்படுவாய்!

**யோபு 22:23 "நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர். அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக்குவீர்."**

உங்கள் வாழ்க்கையில், குடும்பத்தில், தொழிலில், வேலையில் நீங்கள் பலவிதமான பாதிப்புகளோடு, உடைந்து போய், ஆசீர்வாதமற்ற, சிதைக்கப்பட்ட ஒரு நிலைமையில் இருக்கலாம். ''மறுபடியும் நான் எழும்ப முடியுமா? மறுபடியும் நான் ஆசீர்வாதமாய் இருக்க முடியுமா?'' என்று நீங்கள் கலங்கி நிற்கலாம்! ''நீங்கள் மனந்திரும்பினால், மீண்டும் கட்டப்படுவீர்கள்'' என்று ஆண்டவர் சொல்கிறார்.



ஒரு சமயம் இந்தோனேஷியா தேசத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, அந்தப் பட்டணத்தில் மிகவும் பிரபலமான Textile தொழில் செய்து வந்த ஒரு பெரிய தொழிலதிபர், எல்லா வசதியோடும் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தபோது, திடீரென்று ஒருநாள் அவருடைய தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு, தொழில் முடக்கப்பட்டு, பெரிய பாதிப்புக்குள்ளானார்.



செய்தி:
மோகன் சி. லாசரஸ்

அதற்கு மத்தியில் ஒரு கொடிய வியாதி அவர் சரீரத்தை தாக்கினது. தொழிலும் நஷ்டப்பட்டு, வருமானமும் இல்லாமல், அவரது சரீரமும் வியாதிபட்டிருந்த நேரத்தில், இனி உயிர்பிழைப்பார் என்ற நம்பிக்கையை இழந்து, இவருடன் இனி சந்தோஷமாய் வாழ முடியாதென்று எண்ணி, அவரது மனைவி விவாகரத்து செய்ய முடிவெடுத்தார். சில மாதங்களுக்குள் எல்லாவற்றையும் இழந்து, தனித்துவிடப்பட்ட ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.


''இனிமேலும் எனக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது'' என்று தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள தீர்மானித்தார். மிகவும் உடைந்துபோன அந்த நேரத்தில், ஒருவர் அவரிடம், ''நீங்கள் இயேசுவிடம் வந்தால், அவர் உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் மீண்டும் கட்டி எழுப்புவார்'' என்று சொன்னார்.

அந்த வார்த்தையை அவர் கேட்டதும், ''ஆண்டவரை விசுவாசித்து, மெய்யான



தெய்வமாகிய இயேசுவிடம் திரும்பினார்''. அவருடைய இருதயம் இயேசுவின் பக்கம் திரும்பியது. முதலாவது, நம்பிக்கையை இழந்து நின்ற அவருடைய இருதயத்தில் சமாதானம் வந்தது. இரண்டாவது ஆண்டவர் அவரைத் தொட்டு சரீர சுகத்தையும் கொடுத்ததோடு, அவருக்கு ஒரு அற்புத மீட்பைக் கொடுத்தார். அவரை விட்டுப் பிரிய நினைத்த அவருடைய மனைவியின் இருதயத்தையும் கர்த்தர் மாற்றி, அவருடைய குடும்பத்தை மீண்டும் கட்டி எழுப்பி, சந்தோஷமாக வாழ உதவி செய்தார்.

நீங்களும் கூட இது போன்று இழப்புகள், தோல்விகள், துயரங்கள் நிறைந்த நிலையில் இருக்கலாம். ''மனந்திரும்புங்கள், அப்பொழுது மீண்டும் கட்டப்படுவீர்கள்'' என்று இயேசு கூறுகிறார். உங்கள் வாழ்க்கையில் மனந்திரும்ப வேண்டிய காரியம் இருக்குமேயானால் இயேசுவிடம் திரும்புங்கள்.




உங்களை அவர் நேசிப்பதால், இந்த வார்த்தையின் மூலம் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் மனந்திரும்பும்போது, மீண்டும் சீரமைக்கப்படுவீர்கள்.

வாலிபர்களே, உங்கள் வாழ்க்கையை பற்றிச் சிந்தித்து, உங்கள் வழிகளை ஆராய்ந்துபாருங்கள். நீங்கள் ஒருவேளை தவறான வழியில் சென்று கொண்டிருக்கலாம்; மனந்திரும்பும்படி தேவன் உங்களிடம் பேசுகிறார்.

**எனக்கன்பான வாலிபர்களே, உங்களுடைய பாவமான வழிகளைவிட்டு, துன்மார்க்கமான வாழ்க்கையை விட்டு, குறுக்குவழியைவிட்டு, தவறான நட்புகளை விட்டுவிட்டு, தேவனிடம் மனந்திரும்பினால், உங்கள் வாழ்க்கை மீண்டும் கட்டப்படும். நீங்கள் கட்டப்படுவீர்கள் என்று தேவன் வாக்கு கொடுக்கிறார்.**





முகப்பு செய்தி: சதீஷ்

# தேவனுடைய தயவும், கண்டிப்பும்!!

இன்றைய கிறிஸ்தவ உலகில் பல நேரங்களில் நாம், நம் தேவன் அன்பானவர் இரக்கமுள்ளவர் என்று தேவனுடைய ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்க விரும்புகிறோம். தேவனுடைய அன்பு எவ்வளவு உண்மையானதோ, அவ்வளவு உண்மையானது அவருடைய கண்டிப்பும், நீதியும்! தகுதியே இல்லாதவர்களுக்குத் தேவன் காட்டும் அன்பு, அவருடைய தயவு ஆகும். ஆண்டவர் அன்புள்ளவர் என்பதால் அவர் பாவத்தைச் சகிப்பார் என்று அர்த்தமல்ல, தேவன் ஒளியாய் இருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை (1 யோவான் 1:5). எப்படி வெளிச்சத்திற்கு முன்பாக இருள் நிற்க முடியாதோ, அதுபோலவே பாவமும் பரிசுத்தத்தின் முன்பாக நிலை நிற்காது. அவருடைய கிருபையை தவறாகப் பயன்படுத்தி, தொடர்ந்து பாவத்தில் வாழ்கிறவர்கள் மேல் தேவனுடைய கண்டிப்பு வெளிப்படும்.



தாவீது தன் சொந்த குடும்பத்தினரால் நிராகரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டபோது, தேவனுடைய மிகுந்த தயவினால் ஆடுகளை மேய்க்கும் படி அனுப்பப்பட்டவன் அரசனாக உயர்த்தப்பட்டான். ஆண்டவரின் தயவினால், அவனுக்கு விரோதமாக அநேகர் எழும்பின போதும், தேவன் அவனை எல்லா சூழ்நிலையிலும் தப்புவித்துக் காப்பாற்றினார். ''...ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச்

சித்தமானவைகளை அவன் செய்வான்'' என்று அவனைக் குறித்து சாட்சி **(அப்.13:22)** கொடுத்தாலும், தாவீது பாவம் செய்தபோது, ஆண்டவர் அவனுடைய பாவத்தைப் பார்த்துச் சும்மா விட்டுவிடவில்லை. தீர்க்கதரிசியான நாத்தானை அனுப்பி அவனைக் கடிந்து கொண்டார். ''இப்போதும் நீ என்னை அசட்டை பண்ணி ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் **(2 சாமு. 12:10)** என்றார். தேவனுடைய கண்டிப்பால், தாவீது குடும்பத்தின் மீது வாள் எப்பொழுதும் விலகாமல் அவனுடைய சொந்த மகன்களே அவனுக்கு எதிராக எழும்பும் அளவுக்குப் பெரும் பாதிப்புகளைச் சந்தித்தான்.

இன்று பல வாலிபர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை தடம் மாறிப் போவதற்கு காரணம் அவர்கள் தேவனுடைய ஒரு பக்கத்தை மட்டுமே அறிந்து இருப்பது தான். சிறு வயது முதற்கொண்டு தேவனுடைய அன்பைப் பற்றி மட்டுமே கேட்டு வளர்ந்ததால், பல நேரங்களில் நாம் எப்படி வாழ்ந்தாலும் கர்த்தர் கிருபையாய் மன்னிப்பார் என்கிற அலட்சியம் வந்துவிடுகிறது. தேவன் தயவுள்ளவர் மட்டுமல்ல, அவர் கண்டிப்புள்ள நியாயாதிபதி என்பதை அறிந்து வாழ்ந்தோமானால், பாவம் செய்யாமல் இருப்போம். கர்த்தர் உங்களுடைய பக்தியைப் பார்த்து பாவத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடமாட்டார். நீங்கள் கர்த்தருக்கு எவ்வளவு பிரியமாக வாழ்ந்தாலும், அவருக்குப் பிடிக்காத தவறான பழக்கவழக்கங்கள், போலியான உறவுகள், இரகசியமான பாவங்கள் போன்றவற்றை செய்து அலட்சியமாக வாழ்ந்தால் தேவனுடைய கண்டிப்பை சந்திக்க நேரிடும். அவர் (இயேசு) முகதாட்சண்யம் பார்க்கிறவர் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



தாவீது பாவம் செய்தாலும் அது அவனுக்கு உணர்த்தப்பட்டதும் மனங்கசந்து நாத்தானிடத்தில், **"நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன்" (2சாமு 12:13)** என்று மனந்திரும்பினார். பொதுவாக மனிதர்கள் தாங்கள் செய்யும் தவறுகளை யாராவது சுட்டிக்காட்டினால், உடனே தங்களை காத்துக் கொள்ள சாக்குபோக்கு சொல்வார்கள். ஆனால், தாவீது தான் ஒரு நாட்டின் இராஜாவாக இருந்தபோதும், தன் தவறை மறைக்க முயலாமல், எந்த சாக்குப் போக்கும் சொல்லாமல், அப்படியே பாவத்தை ஒப்புக்கொண்டபடியால், **"நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்க செய்தார்" (2 சாமு.12:13)** என்று தேவனுடைய தயவைப் பெற்றுக் கொண்டான். நீங்கள் செய்யும் பாவங்களை மனிதர்களுக்கு முன்பாக மறைத்து விடலாம். ஆனால் அது தேவனுக்கு முன்பாக மறைக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். **"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி.28:13).**

எனக்கன்பான வாலிபர்களே! இயேசு என்னை நேசிக்கிறார், அவருக்காக நான் ஊழியம் செய்கிறேன், அதனால் நான் இரகசியமாக பாவம் செய்தாலும், பரவாயில்லை என்று நினைத்தால், உங்களை நீங்களே ஏமாற்றுகிறீர்கள் என்று அர்த்தம்! நீங்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், உங்கள் இருதயத்தை கடினப்படுத்தாமல், தாவீதைப் போல தாழ்மையோடு பாவத்தை ஒப்புக்கொண்டு மனம் திரும்பினால், தேவனுடைய தயவிலே நிலைத்திருப்பீர்கள்! தவறும் பட்சத்தில் கண்டிக்கப்படுவீர்கள்!



நிகழ்வு: ஜெனிபர்



# அழுத்தத்தின் கீழ்

Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதமும் இந்த article மூலம் உங்களை சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் உலக இளைஞர் தின நல்வாழ்த்துக்கள். ஆமாங்க நம் தேவன் நமக்கு அநேக திறமைகளை தந்திருக்கிறார். நம்மில் அனேகர் அந்த திறமைகளை கண்டுபிடித்து அதை செயல்படுத்திக் கொண்டிருப்போம் ஆனால் ஒரு சிலரோ அந்த திறமைகளை கண்டுபிடிக்காமலே தனக்குள் திறமை இல்லை என்று சொல்லி தாழ்வு மனப்பான்மையோடு இருப்பார்கள். உங்களுடைய திறமைகளை கண்டுபிடித்து அதை ஆண்டவருக்காக செயல்படுத்த வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

இப்பொழுதும் நாம் புகழ் பெற்ற ஒரு திறமையான கலை பற்றி பார்ப்போமா? உங்களுக்கு கற்களினால் செய்யப்பட்ட சிற்பம் பிடிக்குமா? அனேக இடங்களில் தலைவர்கள் உருவத்தையோ விலங்குகள் பறவைகள் உருவத்தையோ கல்லினால் செய்து அதை சிலையாக வைத்திருப்பார்கள்.

**அந்தக் கல் சிற்பத்தை எப்படி செய்கிறார்கள் என்று பார்ப்போமா?**

## I. கல் தேர்ந்தெடுப்பது

முதலில் சரியான கல்லைத் தேர்ந்தெடுக்கணும். கல்லில் வெடிப்பு, ஓட்டை இருக்கக் கூடாது. உறுதியாக இருக்கணும்.

பச்சைக் கல், கருங்கல்: நீண்டநாள் நிற்கும் சிற்பத்துக்கு பயன்படுத்துவாங்க.



## 2. வடிவம் வரைவது

வடிவம் கொடுப்பதற்கு முன் காகிதத்தில் சிற்பத்தோட முன் பக்கம், பக்கவாட்டம், மேல் பார்வை எல்லாம் வரைந்து வைத்து, பின்னர் அந்த கல்லின் மீது கரிக்கட்டி வைத்து முக்கியமான பாகங்களை குறிப்பார்கள். தலை, கை, கால் எங்க வரும்னு அடையாளம் போடுவார்கள்.



## 3. முதல் செதுக்கு – உபரி கல்லை நீக்குதல்

இது “நாக்கிங் அவுட்”னு சொல்லுவாங்க.

சுத்தியல் மற்றும் உளி வைத்து, வடிவத்துக்கு தேவையில்லாத கல்லை தட்டித் தட்டி எடுப்பாங்க. மொரட்டுத்தனமா அடித்து, சிற்பத்துக்கான மொத்த உருவத்தை முதலில் கொண்டு வருவாங்க.

## 4. வடிவம் கொடுத்தல்

இப்போ தட்டையான உளி, பல் உளி போன்று பல வகையான உளிகளை வைத்து கை, கால், முகம், உடம்பு எல்லாத்துக்கும் சரியான வடிவம் கொடுப்பாங்க.



## 5. நுணுக்க வேலைப்பாடு – சீர் செய்தல்

இதுதான் சிற்பத்துக்கு அழகு சேர்கிற பகுதி. கண், மூக்கு, வாய், காது, ஆடையோட மடிப்பு எல்லாத்தையும் சின்ன சின்ன உளி வச்சு செதுக்குவாங்க. ரிஃப்ளர் மாதிரி வளைஞ்ச உளி இந்த நேரத்துல ரொம்ப உதவும்.



## 6. வழவழப்பாக்குதல் – மெருகேற்றுதல்

செதுக்கி முடிச்சதும் சிற்பம் முரடா இருக்கும்.

முதல்ல 'ரொம்பம்' என்ற கல் வச்சு தேய்பாங்க. அப்புறம் 80, 220, 400னு படிப்படியா மணல் தாள் வச்சு தண்ணி ஊத்தி தேய்பாங்க. கடைசியா மெருகு போட்டா கல் பளபளன்னு ஆகிடும்.

பாத்தீங்களா friends ஒரு கல் சிற்பமா மாறுகிறதற்கு எவ்வளோ Painful processஐ கடந்து போக வேண்டியது இருக்கு. First processஏ அந்த கல்லுல இருக்குற தேவையில்லாத பகுதிகளை எடுக்குறதுதான். அப்படி அந்த சிற்பி எடுக்கும் பொழுது அந்த கல்லுக்கு சரா மாரியாக சுத்தியல் போன்ற கடினமான கருவிகளை வைத்து அடி விழுகிறது. ஆனால் அதற்குப் பின்பு தான் அந்த கல் அந்த சிற்பி நினைத்த அழகான வடிவமாக உருப்பெறுகிறது. ஏதோ ஒரு கல் அல்ல இத்தனை கடினமான வலிகளையும் தாங்க கூடிய ஒரு குறிப்பிட்ட கல்லை சிற்பி தேர்ந்தெடுத்தது போல. தேவனும் எத்தனை கடினமான சூழ்நிலைகளாய் இருந்தாலும் அதை சகித்து, பொறுமையாக கடந்து, ஜெயித்து இறுதியில் தேவன் விரும்புகிற குணாதிசயங்களை உடைய ஒரு பாத்திரமாய் மாறுவோம் என்கிற நம்பிக்கையில் தான் நம்மை தேர்ந்தெடுத்துள்ளார்.

எனவே அழுத்தம் உடைக்கப்பட அல்ல உருவாக்கப்படவே...

**(மீண்டும் சந்திப்போம்)**




## தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு புதிய துவக்கம் - எஸ்றா, நெகேமியா & எஸ்தர்

வேத ஆராய்ச்சி : ஜோயல்

**இப்புத்தகங்கள், கி.மு. 538—430-க்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் பெர்சிய பேரரசின் ஆட்சியின்போது, யூதர்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போனபின் நிகழ்ந்தவைகளை உள்ளடக்கியது. எருசலேம் அழிக்கப்பட்டு, மக்கள் சிதறடிக்கப்பட்டிருந்தபோதிலும், தேவன் தமது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராக இருந்து, வியக்கத்தக்க வழிகளில் அவர்களை மீண்டும் கட்டினார்.**

### எஸ்றா — ஆராதனையில் சீரமைப்பு

இப்புத்தகம் பெர்சிய ராஜா, கோரேசின் **(King Cyrus)** கட்டளையின் கீழ், யூதர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பியதை மையமாகக் கொண்டுள்ளது. முதலில் செருபாபேலாலும், பின்னர் ஆசாரியனும் வேதபாரகனுமான எஸ்றாவாலும் வழிநடத்தப்பட்ட மக்கள், ஆலயத்தை மீண்டும் கட்டி, தேவனுடைய பிரமாணத்திற்குத் தங்கள் அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக் கொண்டனர்.

**முக்கியக் கருப்பொருள்கள்:**

- உண்மையான ஆராதனையை மீண்டும் நிலைநாட்டுதல்.
- தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்.
- ஆவிக்குரிய புதுப்பித்தல்.
- கடினமான சூழ்நிலைகளிலும் தேவனுடைய உண்மைத்தன்மை.
- நகரத்தை மீண்டும் கட்டுவதை விட, ஜனங்களின் ஆவிக்குரிய நிலை கட்டப்படுவது மிகவும் முக்கியமானது என்று எஸ்றா வலியுறுத்துகிறார்.

### நெகேமியா — மதில்களை மீண்டும் கட்டுதல்

எருசலேமின் சிதைந்த மதில்களை மீண்டும் கட்டுவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு முன்பு, நெகேமியா பெர்சிய ராஜாவின் பானபாத்திரக்காரனாகப் பணியாற்றினார். எதிரிகளிடமிருந்து வந்த எதிர்ப்பு, சோர்வு மற்றும் அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், நெகேமியா ஜெபம், ஞானம் மற்றும் உறுதியுடன் ஜனங்களை வழிநடத்தினார்.

**முக்கியக் கருப்பொருள்கள்:**

- தலைமைத்துவம் மற்றும் விடாமுயற்சி.
- ஜெபமும் தேவனைச் சார்ந்திருப்பதும்.
- தேவனுடைய மக்களிடையே ஒற்றுமை.
- ஒரே தரிசனத்தோடு மீண்டும் கட்டுதல்.
- அசாதாரணமான காரியங்களைச் செய்து முடிக்க, மனப்பூர்வமான இருதயங்களைக் கொண்ட சாதாரண மக்களைத் தேவன் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை இந்தப் புத்தகம் காட்டுகிறது.

**எஸ்தர் — அடிமைத்தனத்திலும் சொந்த ஜனங்களைக் குறித்த வைராக்கியம்:**

எஸ்றா மற்றும் நெகேமியாவைப் போலல்லாமல், எஸ்தரின் கதை எருசலேமில் அல்லாமல் பெர்சியாவில் நடைபெறுகிறது. யூத ஜனத்தில் அனாதையாக இருந்து, அரசியான எஸ்தர், ராஜா அகாஸ்வேருவின் (Xerxes 1) ஆட்சிக்காலத்தில் தன் சொந்த ஜனங்களை அழிவிலிருந்து காப்பாற்றத் துணிச்சலுடன் தன் உயிரைப் பணயம் வைத்தார்.

சுவாரஸ்யமாக இப்புத்தகத்தில் தேவனின் பெயர் வெளிப்படையாக ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், ஒவ்வொரு நிகழ்விலும் தேவ வழிநடத்துதல் வெளிப்படையாகக் காணப்படுகிறது.

**முக்கிய கருப்பொருள்கள்:**

- தேவனின் மறைமுக வழிநடத்துதல்.
- தைரியமும் விசுவாசமும்.
- தேவன் குறித்த நேரம்.
- தேவ ஜனங்களின் விடுதலை.
- தேவன் மௌனமாக இருப்பது போல் தோன்றினாலும் அவர் செயல்படுகிறார் என்பதை எஸ்தர் விசுவாசிகளுக்கு நினைவூட்டுகிறார்.

**நினைவிற்கு:**

எஸ்றா, நெகேமியா, மற்றும் எஸ்தர் ஆகியோர் ஒன்றிணைந்து, தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகிறார்கள்:

- எஸ்றா ஆலயத்தை மீண்டும் கட்டினார்.
- நெகேமியா மதில்களை மீண்டும் கட்டினார்.
- எஸ்தர் மக்களைப் பாதுகாக்க உதவினார்.

சூழ்நிலை எவ்வளவு சீர்குலைந்ததாகத் தோன்றினாலும், நம்முடைய தேவன் ஆராதனையை மீண்டும் நிலைநாட்டவும், வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்பவும், தமது மேலான நோக்கத்திற்காகத் தம் மக்களைப் பாதுகாக்கவும் முடியும் என்பதை இந்தப் புத்தகங்கள் அழகாக விளக்குகின்றன.



சிந்திக்க : ரூத்

# தயை பெற்ற யோசேப்பு



**குடும்பத்தில் தயை:**

முதிர்வயதில் பிறந்த மகனாக இருந்ததால், யாக்கோபு யோசேப்பை தனது மற்ற எல்லா பிள்ளைகளையும் விட அதிகமாக நேசித்தான். அந்த அன்பின் அடையாளமாக அவனுக்குப் பலவர்ண அங்கியை அளித்தான் (ஆதி. 37).

**அடிமைத்தனத்தில் தயை:**

எகிப்தில் போத்திபாரின் வீட்டில் அடிமையாக இருந்தபோதும், கர்த்தர் யோசேப்போடு இருந்தார். அவன் செய்த அனைத்தும் வாய்த்ததால், போத்திபார் அவன்மேல் நம்பிக்கையும் தயவும் வைத்து, தன் வீட்டின் அனைத்துப் பொறுப்புகளையும் அவனிடம் ஒப்படைத்தான்.

**சிறையில் தயை:**

பொய்யான குற்றச்சாட்டால் சிறையில் அடைக்கப்பட்டபோதும், தேவன் யோசேப்பை கைவிடவில்லை. கர்த்தர் அவனுக்குத் தயவு அளித்து, சிறைச்சாலைத் தலைவரின் கண்களில் கிருபையைப் பெறச்செய்தார். அதன் விளைவாக, சிறைக்குள்ளும் பொறுப்புள்ள நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

**பார்வோனிடத்தில் தயை:**

பார்வோனின் சொப்பனங்களுக்கு ஞானமாய் அர்த்தம் கூறிய யோசேப்பு, எகிப்தின் இரண்டாம் அதிகாரியாக உயர்த்தப்பட்டான். ஒரு அடிமையும் கைதியுமானவன், தேவனுடைய தயவினால் தேசத்தை ஆளும் நிலைக்கு உயர்த்தப்பட்டான். (ஆதி. 41)

# தயை பெற்ற தானியேல்





**தேவனிடத்தில் தயை:**

தானியேல் தேவனிடத்தில் கிருபையும் இரக்கமும் பெற்றவன். அந்தத் தெய்வீக தயவுதான் அவனுக்கு அசாதாரண ஞானத்தையும் புத்தியையும் அளித்தது (தானி. 1:9).

**அஸ்பேனாஸின் கண்களில் தயை:**

அரசனின் பிரதான அதிகாரியான அஸ்பேனாஸின் கண்களில் தேவன் தானியேலுக்கு தயவை உண்டாக்கினார். இதனால் ராஜாவின் உணவால் தன்னைத் தீட்டுப்படுத்தாமல் வாழ முடிந்தது.

**நேபுகாத்நேச்சார் ராஜாவிடத்தில் தயை:**

ராஜாவின் கனவுகளை விளக்கிக் கூறியபின், நேபுகாத்நேச்சார் தானியேலின் ஞானத்தைக் கண்டு வியந்தான். அவனை உயர்ந்த பதவிகளுக்கு உயர்த்தி, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினான்.

**தரியு ராஜாவிடத்தில் தயை:**

தானியேலை எதிர்த்துச் சதிகள் செய்யப்பட்டபோதும், தரியு ராஜா அவன்மேல் அன்பும் தயவும் வைத்திருந்தான். சிங்கக்குகையில் அவனைப் போட வேண்டிய சூழ்நிலை வந்தபோது ராஜா மனவேதனை அடைந்தான். பின்னர் தேவன் தானியேலை விடுவித்தபின், அவனை மேலும் உயர்த்தினான்.



# தயை பெற்ற ரூத்

**போவாசிடத்தில் தயை:**

உறவினரும் மீட்பனுமான போவாஸ், ரூத்தின்மேல் மிகுந்த தயவுகாட்டினான். தன் வயல்களில் கதிர் பொறுக்க அனுமதித்ததோடு, அவள் பாதுகாப்பாக இருக்க ஏற்பாடுகளும் செய்தான். அவளோடு அன்பாய் உணவையும் பகிர்ந்து கொண்டான்.

**தேவனிடத்தில் தயை:**

மோவாபின் புறஜாதி வாழ்க்கையை விட்டுவிட்டு, நகோமியோடு சேர்ந்து இஸ்ரவேலின் தேவனைத் தேடிய ரூத், தேவனுடைய விசேஷ தயவைப் பெற்றாள். அதன் விளைவாக, இயேசு கிறிஸ்துவின் வம்ச வரிசையில் இடம்பெறும் ஆசீர்வாதத்தை அடைந்தாள்.

**பெத்லெகேம் மக்களிடத்தில் தயை:**

மோவாபிய ஸ்திரீயாக இருந்ததால் நிராகரிக்கப்படுவேனோ என்ற பயம் ரூத்துக்கு இருந்தது. ஆனால் அவளுடைய ஒழுக்கம், பணிவு, அன்பான குணம் ஆகியவற்றினால் பெத்லெகேம் பெண்களின் அன்பையும் மரியாதையையும் பெற்றாள்.

**நகோமியிடத்தில் தயை:**

நகோமி, ரூத்துக்கு ஒரு தாயைப் போல ஆறுதலும் வழிகாட்டுதலும் அளித்தாள். துயரத்தில் இருந்த ரூத்தை அரவணைத்து நடத்தினாள்.

# தயை பெற்ற எஸ்தர்

**அகாஸ்வேரு ராஜாவிடத்தில் தயை:**

எஸ்தர் மற்ற பெண்களைவிட ராஜாவின் கண்களில் விசேஷ கிருபையையும் தயவையும் பெற்றாள். அதன் விளைவாக, அவள் ராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.



**யேகாயிடத்தில் தயை:**

ஸ்திரீகளைப் பராமரித்த ராஜாவின் பிரதானியான யேகாய், எஸ்தரின்மேல் விசேஷ தயவு வைத்தான். அவளுக்குச் சிறந்த அலங்காரங்களையும், வேலைக்கார ஸ்திரீகளையும், உயர்ந்த இடத்தையும் அளித்தான். **(எஸ்தர் 2:9)**

**அவளைக் கண்ட அனைவரிடமும் தயை:**

எஸ்தரைப் பார்த்த அனைவரின் கண்களிலும் அவள் கிருபையைப் பெற்றாள். அவளுடைய அழகை விட, அவளின் பணிவும் குணமும் மக்களின் இதயங்களை வென்றது. **(எஸ்தர் 2:15)**

**மொர்தெகாயிடத்தில் தயை:**

அனாதை பெண்ணாக இருந்த எஸ்தர், மொர்தெகாயின் அன்பும் அரவணைப்பும் பெற்றவளாய் வளர்க்கப்பட்டாள். அவர்களின் பரஸ்பர கீழ்ப்படிதலும் தேவபயமும், அரசவையில் உயர்ந்த இடத்தை அவர்களுக்கு அளித்தது.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை






வடமாநிலங்களில் கடந்த ஏப்ரல் மாதம், ஜார்கண்ட் மாநிலத்திலும், மஹாராஷ்டிரா மாநிலம் புனேயிலும் வாலிபர்களுக்கென்று கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகளில் சுமார் 1825 வாலிபர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு, எழுப்புதல் தரிசனத்தைப் பெற்று தங்கள் சபைகளில் சென்று ஊழியம் செய்ய அர்ப்பணித்துச் சென்றனர். முதல்முறையாக அநேகரை தேவன் அபிஷேகித்து எழுப்புதலுக்காகவும், தேசத்திற்காகவும் யுத்தம் செய்து ஜெபிக்கும் சேனையாக எழுப்பியுள்ளார்.

## இக்கூடுகைகளில் தேவ ஊழியர்களைக் கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தினார்










Ephesians















சாதனை சுமா கிரேஷன்



# இருளை வென்ற ஒளிக்குரல்!

*அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!*

**வாழ்க்கை எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாதையை அமைத்துத் தருவதில்லை. சிலருக்கு எளிதாகக் கிடைக்கும். வாய்ப்புகள், மற்ற சிலருக்கு கடுமையான போராட்டத்தின் மூலம் மட்டுமே கிடைக்கின்றன. ஆனால் தடைகள் பெரியதாக இருந்தாலும், தன்னம்பிக்கை அதைவிட பெரியதாக இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதைக் காட்டும் ஒரு இளம்பெண்ணின் வாழ்க்கையை இன்று பார்க்கப் போகிறோம்.**




உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த சாரா மொயின் (Sarah Moin), சிறு வயதிலிருந்தே பல சவால்களுடன் வாழ்ந்து வந்தார். அவரால் தெளிவாகக் கேட்க முடியாது, பேச முடியாது, மேலும் பார்வைக் குறைபாடும் இருந்தது. பள்ளி வாழ்க்கை அவருக்குச் சாதாரண அனுபவமாக இல்லை. ஆசிரியர்கள் சொல்லும் பாடங்களைப் புரிந்துகொள்வது, நண்பர்களுடன் இணைந்து கற்றுக்கொள்வது, தேர்வுகளுக்குத் தயாராவது — இவை அனைத்தும் அவருக்குத் தினமும் எதிர்கொள்ள வேண்டிய போராட்டங்களாகவே இருந்தன.



ஆனால் அந்தப் போராட்டங்கள் அவரது மனதை உடைக்கவில்லை; மாறாக, அவரை மேலும் உறுதியானவராக மாற்றின. குடும்பத்தினரின் அன்பும் ஆசிரியர்களின் ஊக்கமும் அவருக்குப் பெரும் துணையாக இருந்தது. ''ஒருநாள் நான் சாதிப்பேன்'' என்ற நம்பிக்கையை மட்டும் கைவிடாமல், அவர் தனது கல்விக்காக இரட்டிப்பு முயற்சியுடன் உழைக்கத் தொடங்கினார். மற்றவர்கள் எளிதாகச் செய்யும் ஒரு காரியத்தை நிறைவேற்ற அவர் பல மடங்கு உழைக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் அவர் சோர்ந்து போகவில்லை; தன் கனவை நோக்கி விடாமுயற்சியுடன் முன்னேறிக் கொண்டே சென்றார்.

அந்த முயற்சிக்குக் கிடைத்த மகத்தான பலன் — 2026ஆம் ஆண்டு ISC 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 98.7% மதிப்பெண்! இந்தச் சாதனை வெறும் எண்ணிக்கையல்ல; அது அவரது கண்ணீர், தியாகம், போராட்டம், பொறுமை மற்றும் அசைக்க முடியாத மனவலிமையின் வெற்றிக் குரல். உலகம் அவரது குறைகளை மட்டுமே பார்த்தபோது, அவர் தனது திறமையால் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார்.

உடலில் குறைபாடு இருக்கலாம்; சூழ்நிலைகள் எதிராக இருக்கலாம்; வாய்ப்புகள் தாமதமாகலாம். ஆனால் மனதில் நம்பிக்கை இருந்தால் எந்த உயரத்தையும் தொட முடியும் என்பதை சாரா தனது வாழ்க்கையால் நிரூபித்துள்ளார்.

அன்பான நண்பர்களே, சாராவின் வாழ்க்கை நமக்குக் கற்றுத்தரும் மிகப்பெரிய பாடம் என்னவென்றால் — எதை இழந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழக்கக் கூடாது என்பதுதான். இன்று பலர் சிறிய தோல்விகளிலேயே மனம் உடைந்து நின்றுவிடுகின்றனர். ஆனால் சிலர் தடைகளைப் படிக்கட்டுகளாக மாற்றி வெற்றியின் உச்சியை அடைகின்றனர். சாரா அப்படிப்பட்டவர்களில் ஒருவர்...!

**நீங்கள் இன்று சோர்வடைந்து இருக்கிறீர்களா? தோல்வியால் துவண்டு போயிருக்கிறீர்களா? அப்படியானால் உடனே எழும்புங்கள். இருள் எவ்வளவு நீண்டிருந்தாலும், ஒளி உதிக்கும் நேரம் நிச்சயம் வரும். நீங்கள் எழுந்தால் மட்டுமே பிரகாசிக்க முடியும்... சாராவைப் போல!**

**இது உங்கள் நேரம்.**

**சோர்வதா? எழுவதா? — அந்த முடிவு உங்கள் கைகளில்தான் உள்ளது.**



தகவல் : ஜோயல்

# SOUL DETOX



**Hello Friends! சென்ற மாத Detox article உங்களுக்கு நிச்சயம் பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். இந்த மாதம் "பயத்திலிருந்தும் கவலைகளிலிருந்தும்" எப்படி Detox பண்ணலாம்னு தெரிஞ்சிக்கலாமா?**

பயமும் கவலையும் மனதையும் ஆத்துமாவையும் பாதிக்கின்றன. ஒரு ஆபத்து ஏற்படும்போது பயம் என்பது ஒரு இயல்பான எதிர்வினை. ஆனால், அதைப்பற்றிய கவலை தொடரும்போது, அது நம் மன அமைதி, சந்தோஷம், தூக்கம் மற்றும் தன்னம்பிக்கையை பறித்துவிடும். நாம் பயத்தின் பிடியில் வாழ்வதை தேவன் விரும்புவதில்லை. நிச்சயமற்ற சூழ்நிலைகளிலும்கூட தேவ சமாதானத்தை அனுபவிக்க அவர் நம்மை அழைக்கிறார்.

எதிர்காலம், உடல்நலம், நிதிநிலை, உறவுகள் அல்லது தனிப்பட்ட தோல்விகள் பற்றிய கவலைகளிலிருந்து பயம் பெரும்பாலும் உருவாகிறது. எப்போதாவது ஏற்படும் பதட்டம் இயல்பானது என்றாலும், தொடர்ச்சியான பயம், உடல் நிலையையும் ஆவிக்குரிய வாழ்க்கையையும் பாதிக்கக்கூடும். பயத்தை அடையாளம் காண்பதே அதை



## மீள்திறனை வளர்த்தல் (Building Resilience)

மீள்திறன் என்பது கஷ்டங்கள் இருந்தபோதிலும் மீண்டு வந்து முன்னேறிச் செல்லும் திறன் ஆகும். அது ஜெபம், வேத தியானம், ஆதரவான உறவுகள், நன்றியுணர்வு மற்றும் ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் மூலம் வளர்கிறது. ஒவ்வொரு சவாலும் விசுவாசத்திலும் குணத்திலும் வலிமை பெற ஒரு வாய்ப்பாக மாறக்கூடும்..

## ஜெபமும் மேற்கொள்ளும் திறன்களும்:

பவுல், விசுவாசிகள் தங்கள் ஒவ்வொரு கவலையையும் ஜெபத்தில் தேவனிடம் கொண்டுவர ஊக்குவிக்கிறார். நம்மால் கட்டுப்படுத்த முடியாத சுமைகளை விடுவிக்க ஜெபம் உதவுகிறது. ஜெபத்துடன், பின்வரும் நடைமுறை நடவடிக்கைகளும் உதவக்கூடும்:



உங்கள் கவலைகளை நம்பகமான ஒருவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.



ஆரோக்கியமான தூக்கம், உடற்பயிற்சி மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களைப் பேணுங்கள்.



மன அழுத்தத்தைத் தரும் தகவல்களுக்குத் தேவையற்ற முறையில் ஆளாவதைக் கட்டுப்படுத்துங்கள்.

ஒவ்வொரு சாத்தியக்கூறு குறித்தும் கவலைப்படுவதற்குப் பதிலாக, ஒரு நேரத்தில் ஒரு நாளில் கவனம் செலுத்துங்கள்.

## நிச்சயமற்ற சூழலிலும் தேவனை நம்புதல்:



வாழ்க்கை அறியப்படாத விஷயங்களால் நிறைந்துள்ளது, ஆனால் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். தேவனுடைய வாக்குகளை நாம் நினைவுகூரும்போதும், அவர் நமக்கு செய்த நன்மைகளை சிந்திக்கும்போதும், நமது பயங்களையெல்லாம் அவரிடம் ஒப்படைக்கும்போதும் நமக்குள் விசுவாசமும் நம்பிக்கையும் பெலப்படும். விசுவாசம் என்பது நிச்சயமற்ற தன்மை இல்லாத நிலை அல்ல; நமக்கு எல்லாம் புரியாதபோதும் தேவன் நம்மோடிருந்து நம் பட்சத்தில் செயல்படுகிறார் என்ற நம்பிக்கையே!

### TIPS

இன்று, உங்கள் மிகப்பெரிய கவலையை எழுதுங்கள். குறிப்பாக அதைப் பற்றி ஜெபித்து, அதை தேவனிடம் ஒப்படையுங்கள். தேவனுடைய அன்பையும் உண்மையையும் உங்களுக்கு நினைவூட்டும் வேதத்திலிருந்து ஒரு வாக்குத்தத்தத்தை எழுதுங்கள்.



## ஜெபம்:

ஆண்டவரே, என் பயங்களையும் கவலைகளையும் உம்மிடம் கொண்டு வருகிறேன். என் இருதயத்தை உம்முடைய சமாதானத்தால் நிரப்பும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் உம்மை நம்ப எனக்கு உதவிசெய்யும், ஒவ்வொரு நாளையும் விசுவாசத்தோடும் தைரியத்தோடும் எதிர்கொள்ள என்னை பலப்படுத்தும். ஆமென்!





# பாடுகள் மத்தியில்

மிஷனெரி பயணம் : ரூத்

**ஜான் வின்சன் 1880ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று Winnsboro பகுதியில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை திருச்சபை மூப்பராகவும், Mission Sunday School நடத்துபவராகவும் இருந்தார். சிறுவயதிலிருந்தே ஜான், ஜெபம், வேத வாசிப்பு மற்றும் தேவ ஊழிய சூழலில் வளர்க்கப்பட்டார். அருகிலிருந்த கல்லூரியில் பயின்ற இளைஞர்கள் சீனா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு மிஷனெரிகளாகச் செல்வதைப் பார்த்த அனுபவம், அவரது இருதயத்தில் தேவனுக்கான அழைப்பை ஆழமாக விதைத்தது.**



கல்லூரியில் சேர்ந்தபின், "Let Us Evangelize the World" என்ற மாணவர் இயக்கத்தில் இணைந்து, தனது வாழ்வை முழுமையாகத் தேவனுக்கென்று அர்ப்பணித்தார். ஆரம்பத்தில் ஆப்பிரிக்காவுக்கு செல்லத் தயாராக இருந்தாலும், பின்னர் தேவ சித்தத்தின்படி சீனாவுக்கு அனுப்பப்பட்டார். 1907ஆம் ஆண்டு பிப்ரவரி 4 அன்று, சீனாவின் வட Kiangsu பகுதியில் உள்ள Sutsein என்னும் இடத்தை மிஷனெரியாக வந்தடைந்தார். அங்குள்ள மொழி, கலாச்சாரம் மற்றும் மக்களின் வாழ்க்கை முறையை ஆர்வமுடன் கற்றுக்கொண்டு, பல சிரமங்களின் மத்தியிலும் ஊழியத்தைத் தொடங்கினார்.

"உலகத்தில் உள்ள அனைவரும் குழந்தைகளைப் போல இருந்திருந்தால், இந்த உலகமே சொர்க்கமாக மாறியிருக்கும்" என்று கூறிய, குழந்தை மனமுடைய அமெரிக்க மிஷனெரி Miss Jeanie deForest Junkin-ஐ அவர் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன; ஆனால் அதில் மூன்று குழந்தைகள் மட்டுமே உயிருடன் வளர்ந்தனர். இருவரும் கிராமந்தோறும் சென்று, சபைகள் நிறுவி, மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தனர்.

ஆனால் வாழ்க்கை அவர்களுக்கு எளிதானதாக இல்லை. ஜான் மற்றும் ஜீனி இருவரும் கடுமையான உடல்நலப் பிரச்சனைகளை எதிர்கொண்டனர். 1923 ஆம் ஆண்டு, ஜீனி ஒரு மகளைப் பெற்றபின் உயிரிழந்தார். மனைவியையும் சில குழந்தைகளையும் இழந்த அந்த வேதனையான சூழ்நிலையிலும், John Vinson தேவனை குற்றம் சாட்டவில்லை; மாறாக, விசுவாசத்தில் உறுதியாக நின்றார்.



உடல் பலவீனமும் தனிமையும் அவரைச் சூழ்ந்தபோதும், சீனாவில் அவரது ஊழியம் நின்றுவிடவில்லை. கிராமங்களுக்கு நடந்து, படகில், குதிரையில், வண்டிகளில் பயணம் செய்து சுவிசேஷத்தை அறிவித்தார். சிறிய கூடாரங்களிலும், மண் வீடுகளிலும், மர நிழல்களிலும் கூட அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார்.

"ஒரு மனிதன் கிறிஸ்துவை அறிந்தால் ஒரு குடும்பம் மாறும்; ஒரு குடும்பம் மாறினால் ஒரு கிராமமே மாற்றமடையும்" என்பதே அவரது பார்வை.



**அரசியல் கலவரங்களின்போது அவரது வீடும் சொத்துக்களும் அழிக்கப்பட்டபோதும், "என் பொருட்கள் எரிந்துபோயின; ஆனால் என் அழைப்பு எரிந்துபோகவில்லை" என்று கூறி மீண்டும் ஊழியத்தில் தன்னை அர்ப்பணித்தார்.**

1931 ஆம் ஆண்டு, சீனாவின் Yangjiajie கிராமத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் தங்கியிருந்தபோது, சுமார் 600 பேர் கொண்ட கொள்ளைக்காரர் படை அந்த நகரத்திற்குள் நுழைந்தது. அவர்கள் பலரை கைதுசெய்தனர்; அதில் ஜான் வின்சனும் ஒருவர். அரசுப் படைகள் அவரை விடுவிக்க முயன்றபோதும், "முதலில் சீனப் பிணையாளர்களை விடுவியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.



அப்போது கொள்ளைக்கார தலைவன் துப்பாக்கியை அவரது தலையில் வைத்து, "நீ பயப்படவில்லையா" என்று கேட்டான்.

அதற்கு ஜான் அமைதியாக, "இல்லை, நான் பயப்படவில்லை" என்று பதிலளித்தார்.

மீண்டும் அவன், "நான் உன்னைக் கொல்லப்போகிறேன்; அதற்கும் நீ பயப்படவில்லையா" என்று கேட்டான். (அது ஒரு கற்பனைக்கேள்வி அல்ல. 1931ஆம் ஆண்டு நவம்பர் 2 அன்று, சீனாவின் வட Kiangsu பகுதியில் நிகழ்ந்த கொடூரமான நிஜம் அது).

அதற்கும் ஜான் வின்சன் அசைக்க முடியாத அமைதியுடன், "இல்லை, நான் பயப்படவில்லை. நீங்கள் என்னைக் கொன்றால், நான் நேராக என் தேவனிடமே செல்வேன்" என்று பதிலளித்தார்.

அந்த வார்த்தைகளில் அவரது அசைக்க முடியாத விசுவாசமும், நித்திய நம்பிக்கையும் வெளிப்பட்டது. அந்தச் சாட்சி பின்னர் பல தேசங்களில் தேவனுடைய மக்களை உற்சாகப்படுத்தியதாக மாறியது. அதே நேரத்தில் ஜான் வின்சன் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் அவரது தலையும் துண்டிக்கப்பட்டது.



இதை வாசிக்கும் வாலிபர்களே, ஜான் வின்சனின் மரணம், அவர் வாழ்ந்தபோது பேசிய செய்தியைவிட அதிக மக்களுக்குச் சாட்சியாக அமைந்தது. அவரது வாழ்க்கை தியாகம், அன்பு, பொறுமை மற்றும் அசைக்க முடியாத விசுவாசத்தின் உயிருள்ள சாட்சியாக இருந்தது. அவர் அறிவித்த நற்செய்தி; வார்த்தைகளில் மட்டுமல்ல, அவரது வாழ்க்கை முறையிலும் வெளிப்பட்டது. துன்பங்கள் வந்தபோதும் தேவ அழைப்பில் நிலைத்திருந்த அவரது வாழ்க்கை, இன்றைய தலைமுறைக்கு ஒரு உண்மையான சவாலும், ஆழமான ஊக்கமும் ஆகும். இன்று நீங்கள் எதற்குப் பயப்படுகிறீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

# CARRER Guidence

கடந்த மாதம் UPSC தேர்வுக்கான தயாரிப்பை எப்படி ஆரம்பிப்பது என்பதைப் பற்றிப் பார்த்தோம்.



**“நீங்கள் Beginnerஆக இருந்தால்**

# UPSC

**பயிற்சியை எப்படி தொடங்க வேண்டும்?” என்பதைப் பார்க்கலாம்.**

**UPSC (Union Public Service Commission) தேர்வுக்கான தயாரிப்பை ஆரம்பிக்கும்போது குழப்பம் ஏற்படுவது மிகவும் சாதாரணமானது. என்ன படிக்க வேண்டும்? எங்கிருந்து தொடங்க வேண்டும்? எத்தனை புத்தகங்கள் படிக்க வேண்டும்? போன்ற பல கேள்விகள் மனதில் எழலாம். ஆனால் சரியான திசையில் பயணத்தை ஆரம்பித்தால், பாதி வெற்றி கிடைத்ததற்குச் சமம்.**

## 1 Orientation Stage (முதல் 10–15 நாட்கள்)

தேர்வை முதலில் முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள்

- UPSC syllabus-ஐ print எடுத்துப் படிக்கவும்.
- Previous Year Questions (Prelims + Mains) கவனமாகப் பார்க்கவும்.
- YouTube-ல் toppers' strategy videos பார்த்து preparation pattern-ஐ புரிந்துகொள்ளுங்கள்.

இதைக் கடைப்பிடித்தால் “என்ன படிக்க வேண்டும்?” என்ற தெளிவு கிடைக்க வேண்டும்.

## 2 Basics Building Stage (3–4 மாதங்கள்)

UPSC preparation-இன் மிக முக்கியமான கட்டம் இதுதான் இந்த நேரத்தில் strong foundation உருவாக்குவது மிகவும் அவசியம். NCERT புத்தகங்களிலிருந்து ஆரம்பிக்கவும்

- 6 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்புவரை → விரைவான வாசிப்பு
- 11 & 12 ஆம் வகுப்பு → ஆழமான வாசிப்பு

**முக்கிய பாடங்கள்:**

- History
- Geography
- Polity
- Economy
- Science

**அடுத்த நிலை Standard Books**

- Polity → Indian Polity – M. Laxmikanth
- History → India's Struggle for Independence – Bipan Chandra

ஒரே புத்தகத்தை 2 அல்லது 3 முறை படிப்பது, பல புத்தகங்களை ஒருமுறை படிப்பதை விட மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.



## 3 தினமும் தவறாமல் செய்ய வேண்டியது (Newspaper Reading)

- The Hindu அல்லது
- The Indian Express

தினமும் 1 முதல் 1:30 மணி நேரம் ஒதுக்குங்கள். முக்கியமான செய்திகளுக்கு மட்டும் short notes எடுக்கவும். அனைத்தையும் எழுத முயற்சி செய்ய வேண்டாம்.

## 4 Notes Making



- Short notes மட்டும் எழுதுங்கள்
- Headings & bullet points பயன்படுத்துங்கள்
- Revision செய்ய எளிதாக இருக்க வேண்டும்

"எழுதாமல் படிப்பது" என்பது Beginner-கள் செய்யும் மிகப்பெரிய தவறுகளில் ஒன்று.

## 5 Answer Writing Practice

முதல் மாதத்திலிருந்தே மெதுவாக ஆரம்பியுங்கள். பலர் answer writing-ஐ மிகவும் தாமதமாக ஆரம்பிப்பார்கள். அது தவறு.

- தினமும் குறைந்தது 1 answer எழுதுங்கள்
- Simple structure follow செய்யுங்கள்:

o Introduction o Body o Conclusion

ஆரம்பத்தில் perfect answer எழுத வேண்டிய அவசியமில்லை; consistency தான் முக்கியம்.

## 6 Mock Tests (3 மாதங்களுக்குப் பிறகு ஆரம்பிக்கலாம்)

- Prelims basic mock tests எழுதுங்கள்
- தவறுகளை analyze செய்யுங்கள்
- எங்கு குறைபாடு இருக்கிறது என்பதை கண்டறியுங்கள்


"Test எழுதுவது" மட்டுமல்ல, "mistakes analyze செய்வது" தான் உண்மையான preparation.

Beginner Daily Study Plan (Simple Schedule) ஆரம்பத்தில் தினமும் 4–6 மணி நேரம் படித்தாலே போதும்.

**Example Schedule:**



- Morning (2 hrs) → NCERT
- Afternoon (2 hrs) → Standard Books
- Evening (1 hr) → Newspaper
- Night (1 hr) → Revision



**Beginner Mistakes – தவிர்க்க வேண்டியவை**

× அளவுக்கு அதிகமான புத்தகங்கள் படிப்பது
× Notes எடுக்காமல் படிப்பது
× Revision செய்யாமல் விடுவது
× Social Media distractions
× மற்றவர்களின் preparation-ஐ பார்த்து பயப்படுவது

UPSC என்பது ஒரு marathon பயணம். ஆரம்பத்தில் வேகமாக ஓடுவது முக்கியமல்ல; தொடர்ந்து ஓடுவது தான் முக்கியம். தினமும் சிறிய முன்னேற்றம் இருந்தாலும், அது நாளை பெரிய வெற்றியாக மாறும்.

அடுத்த மாதம்... "படித்துக்கொண்டே UPSC பயிற்சி எடுப்பது எப்படி?"

# ஜெபிக்கலாம் வாங்க! 2026 ஜூலை

ஜெபம் : ஞானி




▶ Netflix (325 மில்லியன் subscribers – 2025), Amazon Prime Video (315 மில்லியன் viewers/month), Disney+Hotstar (88%), YouTube (35–40%) போன்ற தளங்களை 18–29 வயது இளைஞர்கள், குறிப்பாக பெண்கள் அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள். தொடர்ச்சியாக வீடியோக்கள் மற்றும் தொடர்களை பார்ப்பதால் (binge-watching) பொழுதுபோக்கு, சமூக தொடர்பு போன்ற காரணங்களால் நேரம், உணர்ச்சிகள் மற்றும் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. இந்த பழக்கத்திலிருந்து விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.




▶ K-POP மற்றும் K-Drama மீது அடிமைத்தனம் அதிகரித்து வருகிறது. 13–18 வயதினரில் பலர் தினமும் குறைந்தது 5 மணி நேரம் இதற்காக செலவிடுகிறார்கள். சில இடங்களில் பெற்றோருடன் பிரச்சனை, மனஅழுத்தம், மற்றும் தற்கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன. கலைஞர்களின் தோற்றம் மற்றும் வாழ்க்கை முறையை பின்பற்றி plastic surgery செய்வதும் அதிகரித்து வருகிறது. இந்த அடிமைத்தனம் மாறும்படி ஜெபிப்போம்.





▶ Meta நிறுவனம் AI தொழில்நுட்ப வளர்ச்சியால் சுமார் 8,000 பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். Standard Chartered வங்கி 2030க்குள் சுமார் 7,000 வேலைவாய்ப்புகளை குறைக்க திட்டமிட்டுள்ளது. இதனால் பலர் மனஅழுத்தம் மற்றும் பயத்தில் உள்ளனர். பணியிழந்தவர்கள் நம்பிக்கை இழக்காமல் இருக்கவும், அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.



▶ பஞ்சம் மற்றும் வறுமையால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க உலக நாடுகள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், சரியான திட்டமிடல் மற்றும் செயல்பாடு கிடைக்கவும், அவர்களுக்கு கல்வி தொடர்ச்சியாக கிடைக்கவும் ஜெபிப்போம்.



▶ வருடத்திற்கு சுமார் 4,00,000 குழந்தைகள் மற்றும் இளம் வயதினர் (0–19) cancer நோயால் பாதிக்கப்படுகிறார்கள். அதிக வருமான நாடுகளில் 80% குழந்தைகள் குணமடைகிறார்கள். ஆனால் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் 30%க்கும் குறைவான குழந்தைகளே சிகிச்சை பெறுகிறார்கள். Leukemia, neuroblastoma, lymphoma, bone மற்றும் thyroid cancer போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் குணமடைய ஜெபிப்போம்.




▸ July 30 – மனிதக் கடத்தலுக்கு எதிரான உலக தினம் (World Day against Trafficking in Persons) ஆகும். குழந்தைகளும் இளைஞர்களும் அதிகமாக கடத்தப்படுகிறார்கள்; அதில் பெரும்பாலானவர்கள் பெண்கள். சிலர் குழந்தை தொழிலாளர்களாகவும், குற்ற செயல்களில் ஈடுபடவும், ஆன்லைன் பாலியல் சுரண்டலுக்கும் ஆளாகிறார்கள். இவர்கள் தீயவர்களின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.



▸ பெண் சிசுக்கொலை முற்றிலும் ஒழியவும், பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படவும், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மனந்திரும்பவும், சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்படவும், விழிப்புணர்வு அதிகரிக்கவும் ஜெபிப்போம். தெருவில் வாழும் குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் மருத்துவ உதவிகள் கிடைக்கவும், குழந்தைகளை அழிக்க முயலும் எல்லா தீய செயல்களும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் முறியடிக்கப்படவும் ஜெபிப்போம்.



▸ இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் சுமார் 70 பேர் முதல் பிறந்தநாளை காண்பதில்லை. 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 58% பேருக்கு முழுமையான தடுப்பூசி கிடைப்பதில்லை; 24% பேருக்கு எந்த தடுப்பூசியும் இல்லை. இதனால் பல குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளுடனும், எடைக்குறைவுடனும் பிறக்கிறார்கள். குழந்தை மரணங்கள் குறையவும், சரியான மருத்துவ உதவி கிடைக்கவும், மருத்துவர்களுக்கு தேவன் ஞானம் அருளவும் ஜெபிப்போம்.



▸ உக்ரைன் போரில் சுமார் 5 லட்சம் ராணுவ வீரர்களை இழந்ததால் ரஷ்யா பெரிய சமூக மற்றும் பொருளாதார சிக்கல்களை சந்திக்கிறது. இளைஞர்கள் ராணுவத்திற்கு பயன்படுத்தப்படுவதால் விவசாயம், உற்பத்தி மற்றும் IT துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டு பதற்றம் அதிகரிக்கிறது. உக்ரைன்–ரஷ்யா போர் விரைவில் நிறைவடைய ஜெபிப்போம்.

▸ கர்த்தர் சொன்ன இறுதி கால அடையாளங்கள் நிறைவேறி வருகின்றன. அதுபோலவே அவர் வாக்குத்தத்தமாகக் கூறிய எழுப்புதல் தாமதமில்லாமல், கலப்பில்லாமல் சபைகளிலும், குழந்தைகளிலும், இளைஞர்களிலும் தீவிரமாக பரவ ஜெபிப்போம்.



# IGNITERS

## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு!**

**ஆயத்தப்படுத்து!**

### *EVERY 1st SUNDAY (5th JULY)*

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal,
# 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

### *EVERY 2nd SUNDAY (12th JULY)*

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SATURDAY (18th JULY)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3rd SUNDAY (19th JULY)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM )**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4th SUNDAY (26th JULY)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

ஆலோசனை: அவி

Heart Beat

# அழகு Vs. அடையாளம்!

நான் Ph.D. முடித்து ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். எனக்குத் தற்போது 32 வயதாகிறது. திருமணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய புகைப்படத்தைப் பார்த்தவுடனே பலர் வேண்டாம் என்று கூறிவிடுகிறார்கள். படிப்பிற்கோ, நல்ல வேலைக்கோ இந்த நாட்களில் மதிப்பில்லை. அழகுதான் முக்கியம் என்று அனைவரும் என்னை நிராகரித்து விட்டார்கள். நான் பாடம் எடுக்கும் மாணவிகள் தங்களுடைய திருமண அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு, "மேடம், என்னுடைய திருமணத்திற்கு கண்டிப்பாக வர வேண்டும்" என்று கூறுகிறார்கள். எனது பெற்றோரும் என்னை நேசிக்காமல், "சீக்கிரம் யாரையாவது திருமணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறு; உன் தங்கைக்கு இடையூறாக இருக்காதே" என்று கூறுகிறார்கள்.

இவற்றையெல்லாம் கேட்கும்போது, ஏன் வாழ்கிறோம் என்றே தோன்றுகிறது. திருமணம் ஆகவில்லை என்ற வேதனை ஒருபுறம் இருந்தாலும், கல்லூரி முதல்வராக வேண்டும் என்ற இலட்சியத்தையும், மேலும் பல கல்லூரிகளை நிறுவ வேண்டும் என்ற கனவுகளையும் இந்தச் சூழ்நிலை சுக்குநூறாக உடைத்துவிடுகிறது. எனது கனவு நிறைவேறுமா? இந்த வேதனைகளோடு நான் ஏன் வாழ வேண்டும்?

— ரோஷினி, ஊட்டி.

**அன்பு சகோதரி ரோஷினி,**

உங்களின் வேதனையும் மனக்குழப்பமும் நன்கு புரிகிறது. இந்தச் சூழலில் பெற்றோரிடமிருந்து அரவணைப்பை எதிர்பார்த்த உங்களை, மனதை உடைக்கும் வார்த்தைகளும் அலட்சியமான பேச்சுகளும் அதிகமாகக் காயப்படுத்தியுள்ளன. அதனால் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் அளவிற்கு உங்கள் மனம் பாதிக்கப்பட்டுள்ளது.

ரோஷினி, எல்லாப் பிரச்சனைகளுக்கும் வேதனைகளுக்கும் தற்கொலை ஒரு தீர்வாகாது. அப்படிப் பார்த்தால், உலகளவில் பெண்களின் எண்ணிக்கை குறைந்து போயிருக்கும். தங்களுக்கு ஏற்பட்ட அவமானம், அலட்சியம், அவதூறு மற்றும் நிராகரிப்புகளைத் தாண்டி வாழ்ந்து காட்ட வேண்டும் என்று உறுதியெடுத்து எழுந்த பல பெண்கள், பின்னர் சாதனையாளர்களாக மாறி சரித்திரத்தில் இடம்பிடித்துள்ளனர்.

முதலில், ▸ உங்களை நீங்கள் நேசிக்க வேண்டும்.

▸ உங்களுக்குள் இருக்கும் தாழ்வுமனப்பான்மையை வெளியே தூக்கி எறிய வேண்டும்.

▸ ''நான் அழகாக இருக்கிறேன்'' என்று முதலில் நீங்கள் நம்ப வேண்டும்.



அழகு என்பது வெளித்தோற்றத்தில் மட்டும் இல்லை; உள்ளத்தின் நற்குணங்களில்தான் உண்மையான அழகு இருக்கிறது என்பதை உணர வேண்டும். **சங்கீதம் 139:14-ல், "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்"** என்று கூறப்படுகிறது. ஆங்கிலத்தில் இது: **"I am fearfully and wonderfully made"** என்று மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ரோஷினி, உங்களை அழகாகவும், ஆச்சரியமாகவும், பிரமிக்கத்தக்க விதமாகவும் தேவன் உண்டாக்கியிருக்கிறார். முதலில் அதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள். இந்த உலகம் வெளித்தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், தேவன் உங்களுடைய உள்ளான அழகையே பார்க்கிறார்.

"அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" என்று வேதம் கூறுகிறது. 1 பேதுரு 3:4

**ரோஷினி, தேவன் உங்களுக்கு இயற்கையாகவே பல நல்ல குணங்களைத் தந்திருக்கிறார். அவற்றிற்காக தேவனைத் துதியுங்கள்.**

## உங்களிடம் இருக்கும் சிறந்த குணங்கள்

- **சாந்தம்** – அதனால்தான் உங்கள் பெற்றோரை இன்னும் நேசிக்க முடிகிறது.
- **அமைதியான மனப்பான்மை** – பெற்றோர் பேசிய அலட்சியமான வார்த்தைகளுக்கு எதிர்த்துப் பேசாமல், அவர்களைக் காயப்படுத்தாமல் அமைதியாக இருக்க முடிகிறது.
- **உதார மனப்பான்மை** – உங்களைப் போன்ற பல பெண்கள் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காக பல கல்லூரிகளை நிறுவ வேண்டும் என்று நினைப்பது உங்கள் பரந்த மனதை வெளிப்படுத்துகிறது.
- **விடாமுயற்சி** – இத்தனை போராட்டங்களின் மத்தியிலும் படித்து, ஒரு கல்லூரி பேராசிரியராக உயர்ந்து நிற்பது வியக்கத்தக்க சாதனை.
- **பொறுமை** – இதுவரை எந்தத் தவறான முடிவும் எடுக்காமல் பொறுமையாகக் காத்திருக்க முடிந்துள்ளது.



## சில ஆலோசனைகள்

- வயதாகிவிட்டதே என்று அவசரப்பட்டு தவறான நபரைத் திருமணம் செய்துகொண்டால் பின்னர் வருத்தப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே பொறுமையாக இருங்கள்.
- உங்கள் பெற்றோரிடம் முதலில் தங்கையின் திருமணத்தை முடித்துவிட்டு, பின்னர் எனக்குச் செய்யலாம் என்று அமைதியாக எடுத்துச் சொல்லுங்கள்.
- ஒருவேளை பெற்றோர் அனுமதித்தால், பெண்களுக்கான பாதுகாப்பான விடுதியில் (Ladies Hostel / Paying Guest) தங்கி வேலைக்குச் செல்ல முயலலாம். இது சில தேவையற்ற மனஅழுத்தங்களைக் குறைக்க உதவும்.
- அதே நேரத்தில், உங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணையைத் தேவன் தரும்படி உபவாசித்து ஜெபியுங்கள்.
- உங்களுக்குக் கட்டாயம் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையோடு இருங்கள்.
- அதுவரை பேராசிரியர் பணியைத் திறம்படச் செய்யுங்கள்.
- கல்லூரி முதல்வராக வேண்டும் என்ற உங்கள் கனவை ஒருபோதும் கைவிடாதீர்கள்.



**All the best! வருங்கால கல்லூரி முதல்வர் ரோஷினி!**

# செய்திகள்!

## உலகளவில் 120 கோடி பேர் மனநல பிரச்சினைகளால் பாதிப்பு:

## 1990-க்குப் பிறகு இரு மடங்கு அதிகரிப்பு!

லண்டன்: இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் 'தி லான்செட்' மருத்துவ இதழில் வெளியாகி உள்ள ஆய்வுக் கட்டுரையில் இதுகுறித்து கூறியிருப்பதாவது: உலகளவில் மனநலம் தொடர்பான பிரச்சினைகளில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 120 கோடியாக உள்ளது.

இது கடந்த 1990-ம் ஆண்டுக்குப் பிறகு 2 மடங்காகும். இதுபோன்ற பாதிப்பு பெண்களிடம்தான் அதிகமாகக் காணப்படுகிறது. அதேநேரத்தில் ஆட்டிசம், கவனக் குறைபாடு, ஆளுமை குறைபாடு போன்றவை ஆண்களிடம் காணப்படுகின்றன.

இதேபோல் கடந்த 1990-ம் ஆண்டுக்குப் பிறகு பதற்றம் 158 சதவீதமும், மனச்சோர்வு அல்லது மன அழுத்தம் 131 சதவீதமும் அதிகரித்துள்ளது. இந்த பூமியில் 7 பேரில் ஒருவர் மனநல பாதிப்பில் வாழ்கிறார்.

கரோனா தொற்றுக்கு முன்பே பதற்றம், மன அழுத்தம் போன்றவை அதிகமாக இருந்தன. உலகளவில் கரோனா காலத்திலும், அதற்குப் பிறகும் அந்தப் பிரச்சினை வேகமாக அதிகரித்துவிட்டது. அதன்பிறகு பழைய நிலைக்கு வரவில்லை.

அதிலும் கடந்த 2023-ம் ஆண்டுதான் இந்தப் பிரச்சினை உச்ச கட்டத்தில்



இருந்துள்ளது. குறிப்பாக 15 வயது முதல் 19 வயதுள்ள இளைஞர்கள்தான் மனநலம் பாதிப்பு போன்ற பிரச்சினைகளில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு உலகளவில் மனநல சேவைகளை அதிகரிப்பது மட்டும் தீர்வாகாது. வாழ்க்கை முறையில் தெரபி, தேவைப்படும் நேரங்களில் மருந்துகள், உணவு, உடற்பயிற்சி, உறக்கம், சமூக ஈடுபாடு போன்ற மாற்றங்களையும் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு லான்செட் இதழில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரையின் முதன்மை ஆசிரியர் டாக்டர் டேமியன் சன்டோமவ்ரோ கூறும்போது, "இந்த அளவுக்குப் பாதிப்பு இருப்பதை அறிந்து உண்மையிலேயே அதிர்ச்சி அடைந்தேன்" என்று கூறியுள்ளார். இவரது குழுவினர் 12 பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தி தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

**இந்து தமிழ் திசை 23 May 2026.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# வாலிபர் எழுப்புதல் கூடுகை!!

வாலிபர்கள் வல்லமை வரங்களோடு தேவனுக்காக எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மே மாதம் 9ம் தேதி சென்னை வேப்பேரி BKN ஹாலில் நடத்தப்பட்ட கூடுகையில் சுமார் 885 பேர் கலந்து கொண்டு, வல்லமை வரங்களைப் பெற்று, சென்னைப் பட்டணத்தின் உத்திரவாதத்தை உணர்ந்து செயல்படுகிறவர்களாக மாறத் தங்களை அர்ப்பணித்துச் சென்றனர். சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், "சென்னைப் பட்டணம் ஏன் எழுப்புதலுக்கு அவசியம்?" என்பதைக் குறித்து பேசி, வந்திருந்த வாலிபர்களை ஜெபத்தில் வழி நடத்தினார்கள்.

இதேபோல் மே மாதம் 1ஆம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் கைகாட்டியில் நடைபெற்ற கூடுகையில் சுமார் 904 பேர் கலந்து கொண்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டு கடந்து சென்றனர். தேவனுக்கே மகிமை!



Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

# வாலிபர் எழுப்புதல்

## கூடுகை 2026

### சோழிங்க நல்லூரில்

ஜூலை 12
ஞாயிற்றுக் கிழமை

நேரம்: மாலை
4-8
வரை

இடம்:
Sacred Heart Matriculation School,
தவராஜ் நகர், சோழிங்கநல்லூர் சென்னை.

9884410258 | 9962438879

### ஜெபமலையில்

ஜூலை 26
ஞாயிற்றுக் கிழமை

நேரம்:
மதியம் 2 - 5.30

இடம்:
கீழ மாதாபுரம், ஜெபமலை

97509 55548, 83001 31000

### பட்டுக்கோட்டையில்

ஆகஸ்ட் 1 (சனிக்கிழமை)

நேரம்: காலை 9:00 - 2:30 வரை

இடம்: நியூ இயேசு நம்மோடு சபை,
பை-பாஸ் ரோடு அருகில்,
அணைக்காடு, பட்டுக்கோட்டை.

9489775075 | 9943228833

### நாகர்கோவிலில்

செப்டம்பர் 20
(ஞாயிற்றுக் கிழமை)

நேரம்:
மதியம் 3 - 6 வரை

இடம்: ஆனந்தம் மினி ஹால்,
கலெக்டரேட் அருகில்,
சிதம்பரநாதன் தெரு, நாகர்கோவில்

97509 55548, 84286 36128



செய்தியும் ஜெபமும்:

சகோ.
அவினாஷ்